பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
21 06 2025 12 40
சனிக்கிழமை பிற்பகல்
ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- உலகின் பல்வேறு பகுதிகளில் பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், அமைதிக்கான வழிகாட்டியாக யோகா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- உடல்நலனை மட்டுமின்றி, மனநலனையும் சீராக பராமரிக்க யோகா உதவிடும் என்றும் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

- சர்வதேச யோகா தின கொண்டாட்டங்கள் 175 நாடுகளில் நடைபெறுவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

- தமிழகத்தில் இதுவரை பேருந்து வசதி கிடைக்காத 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மினி பேருந்து இயக்கப்படுவதாக மாநில அரசு கூறியுள்ளது.

- ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா 2 தங்கம், 6 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

உலகின் பல்வேறு பகுதிகளில் பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், அமைதிக்கான வழிகாட்டியாக யோகா திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சர்வதேச யோகா தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

யோகா உலகளாவிய கூட்டுறவுக்கான இணைப்புப் பாலமாக இருக்க வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

உலகின் ஆரோக்கியத்திற்கு யோகா என்பதை மையக் கருத்தாகக் கொண்டு இந்த தினம் கொண்டாடப்படுவதாக பிரதமர் கூறினார்.

விசாகப்பட்டினத்தின் ராதாகிருஷ்ணன் கடற்கரைப் பகுதியில் நடைபெற்ற இந்த யோகா தின நிகழ்ச்சியில், 28 கிலோ மீட்டர் தூரம் வரை மக்கள் பங்கேற்று யோகா பயிற்சியினை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். 45 நிமிடம் யோகா பயிற்சியினை இவர்கள் மேற்கொண்டதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

இந்த நிகழ்ச்சியில் சர்வதேச யோகா தினத்தையொட்டி நினைவு தபால் தலையையும் திரு. நரேந்திர மோடி வெளியிட்டார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு டேராடூனில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் பங்கேற்று பேசினார்.

யோகாவுக்கு உலகளவில் வரவேற்பு அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்நாளையொட்டி நாடு முழுவதும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மத்திய அமைச்சர்கள் பங்கேற்று யோகா பயிற்சியினை மேற்கொண்டனர்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா, உடல் நலனை மட்டுமின்றி மனநலனையும் சீராக பராமரிக்க யோகா உதவுவதாக குறிப்பிட்டார்.

ஜம்மு கஷ்மீரின் உதம்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் மற்றும் ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்தர் திரிவேதி ஆகியோர் பங்கேற்று யோகா பயிற்சியை மேற்கொண்டனர்.

குஜராத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சொந்த ஊரான **Vadnagar**-ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் பங்கேற்று யோகா பயிற்சியினை மேற்கொண்டார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அகமதாபாதில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

அம்மாநிலத்தில் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சிகளில் 1 கோடிக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

சென்னை தாம்பரத்தில் உள்ள தேசிய சித்த மருத்துவ வளாகத்தில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் பங்கேற்ற மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

சேலத்தில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு. குமாரசாமி பங்கேற்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சேலம் உருக்காலை வளாகத்தில் பாதுகாப்பு தளவாட தொழிற்சாலை அமைக்கும் திட்டம் முதற்கட்ட ஆலோசனையில் இருப்பதாக கூறினார்.

இது தொடர்பான முறையான அறிவிப்பு அடுத்த 4 மாதங்களில் வெளியாக வாய்ப்புள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மாநிலத்தின் இதர பகுதிகளில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

கடலோர காவல்படையினர் ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் உள்ள நீச்சல் குளத்தில் தேசிய கொடியுடன் ஜல யோகாசனம் செய்தனர்.

மாமல்லபுரம் கடற்கரை கோயில் அருகே தாம்பரம் விமானப்படை வீரர்கள் யோகா பயிற்சி மேற்கொண்டனர்.

புதுதில்லி ஆகாஷ்வாணி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அதன் தலைமை இயக்குநர் டாக்டர் **Pragya Paliwal Gaur,** கூடுதல் தலைமை இயக்குநர் திரு. **L. Madhu Nag** மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இந்தியா மட்டுமின்றி இலங்கை, பங்களாதேஷ், நேபாளம் உள்ளிட்ட 175 நாடுகளில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

>><><><><<

நடப்பு நிதியாண்டில் இதுவரை நேரடி வரிவசூல் 5 லட்சத்து 45 ஆயிரம் கோடி ரூபாய் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த நிதியாண்டில் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இது 4 புள்ளி எட்டு ஆறு சதவீதம் அதிகமாகும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>><><><><<

தமிழகத்தில் இதுவரை பேருந்து வசதி கிடைக்காத 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மினி பேருந்து இயக்கப்படுவதாக மாநில அரசு கூறியுள்ளது.

மூவாயிரத்துக்கும் மேற்பட்ட வழித்தடங்களில் இயக்கப்படும் மினி பேருந்துகள் மூலம் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>><><><><<

மத்தியப்பிரதேசம் மற்றும் உத்தரப்பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் அதி கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத், மகாராஷ்டிரா, ஆந்திரா, தெலங்கானா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளிலும் மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>><><><><<

உலக இசை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்-1

ஆசியக் கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா 2 தங்கம், 6 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

சிங்கப்பூரில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Kushal Dalal**-லும், மகளிர் ஒற்றையர் பிரிவில் **Tejal Salve**-வும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Sanmukhi Budde** வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவர் மகளிர் மற்றும் கலப்புக் குழுப் பிரிவுகளில் இந்தியாவுக்கு 5 வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Sachin Chechi** வெண்கலப் பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் 9 பதக்கங்களை வென்ற இந்தியா பதக்கப் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்தது.

>><><><><<

ஆசிய ஜூனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் விக்கி தங்கப்பதக்கம் வென்றார்.

வியட்நாமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 97 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் **Sujeet** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

>><><><><<

ஆசிய பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் நித்யஸ்ரீ சுமதி சிவன் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-15, 21-6 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் **Saeyang Chai**-ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் சூர்யகாந்த் யாதவும், 22-20, 21-17 என்ற செட்கணக்கில் கொரியாவின் **Cho Nadan**–ஐ வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறினார்.

>><><><><<